# பனிமயம்

மே 2024

நன்றிச் சிறப்பிதழ்


ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இந்த மாத இதழுக்கு “நன்றிச் சிறப்பிதழ்” என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆம், இறைவனுக்கும், உங்களுக்கும் நன்றி கூறும் வேளை இது. பனிமய அன்னையின் திருத்தலப் பேராலய அதிபராகவும், பங்குத் தந்தையாகவும் ஐந்து ஆண்டுகளாக (2019-2024) திருப்பணியாற்றி, அதனை நிறைவு செய்யும் நேரம் இது.

“எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு **நன்றி செலுத்துகின்றேன்.** ஏனெனில் நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத்தொண்டில் அமர்த்தினார்” (1 திமொ 1:12) என்னும் பவுலடியாரின் உணர்வுகளையே நானும் வெளிப்படுத்துகிறேன். ஆண்டவர் என்னை இத்திருத்தலத்தின் திருப்பணியில் அமர்த்தியதோடு, கரம் பிடித்து நடத்தினார், ஆசிகளைப் பொழிந்தார். அவருக்கே என் முதல் நன்றியும், புகழ்ச்சியும் உரித்தாகுக.

தொடர்ந்து உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். “சகோதர சகோதரிகளே, உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் **நன்றி செலுத்த** நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஆம், அவ்வாறு செய்வது தகுதியே. ஏனெனில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஓங்கி வளருகின்றது. நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் செலுத்தும் அன்பு பெருகி வழிகிறது” (2 தெச 1:3) என்ற பவுலடியாரின் சொற்களையே நானும் பயன்படுத்த விழைகிறேன். இந்த ஐந்து ஆண்டு காலத்தில் உங்களது நம்பிக்கையும், அன்பும் என்னை வலிமைப்படுத்தின, வளரச்செய்தன. உங்களுக்கு நன்றி!

“பனிமயம்” இதழ் வழியாக உங்களோடு உறவாடிய காலம் இனிமையானது. பனிமய அன்னையின் ஆசிகள் அருள்நிறைந்தவை. இனிய நினைவுகளுடன் நன்றி கூறுகிறேன். அடுத்த இதழில் உங்களிடமிருந்து விடைபெறுவேன்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



# உள்ளே...

## நன்றிச் சிறப்பிதழ்


1. சீயோன் மகள்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . 4
   அருள்பணி. குமார்ராஜா
2. இறைவனின் திருச்சமூகம் . . . . . . . . . . . . . . . 6
   கலாபன் வாஸ்
3. புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் மரபுகளும் மாற்றங்களும் . . . . . . . . . . . . 8
   அருள்பணி. குமார்ராஜா
4. அம்மா!. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 10
   பெனாட்
5. பனிமய பங்குத் தந்தையர் . . . . . . . . . . . . . . 11
6. புனித பனிமய அன்னைப் பேராலயத்தில். . . . 12
   கடந்த ஐந்து ஆண்டுகளின் (2019-2024) சிறந்த 10 நிகழ்வுகள்
7. மாதம் ஒரு மாதா படம் . . . . . . . . . . . . . . . 15
8. பனிமய சாட்சியங்கள் . . . . . . . . . . . . . . . . . . 16
9. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 18
10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . . 20
11. பனிமயம் இதழின் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்ட நிகழ்வுகள் . . . . 24



உதயம் 25 தாரகை 9

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
புனித பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா



### பனிமயம் விளம்பர விபரங்கள்

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
புனித பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


### இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**துறவற மற்றும் மறைமாவட்டப் பயிற்சி நிலையினருக்கான உருவாக்கம்**

துறவறப் பெண்கள், ஆண்கள், மறைமாவட்டப் பயிற்சி நிலையினர் ஆகியோர் தங்களின் மனித, மேய்ப்புப் பணி, ஆன்மீக மற்றும் குழும உருவாக்கத்தின் வழியாக நற்செய்திக்கான நம்பிக்கைக்குரிய சாட்சிகளாக வழிநடத்தப்பட்டு, தங்களின் தனிப்பட்ட இறையழைத்தலில் வளர நாம் மன்றாடுவோம்.

மரியன்னையின் முன்னோடிகள் : 10

# சீயோன் மகள்!



மரியன்னையின் முன்னோர்கள் பட்டியலில் உண்மையான பெண்கள் மட்டுமல்ல, உருவகப் பெண்களும் உள்ளனர் என்பது பலருக்கும் தெரியாது. அத்தகைய உருவகப் பெண்களுள் ஒருவர்தாம் "சீயோன் மகள்".

யார் இந்த சீயோன் மகள்? என்று திகைக்க வேண்டாம். யூதர்களின் புனித நகராம் எருசலேமின் செல்லப் பெயர்தான் சீயோன் மகள். சற்று கூர்ந்து நோக்கினால், காரணம் புரிந்துவிடும். எருசலேம் குன்றுகள்மேல் கட்டப்பட்ட ஒரு நகரம். எருசலேம் அமைந்துள்ள குன்றின் பெயர்தான் சீயோன். சீயோன் மலைமேல் கட்டப்பட்டுள்ளதால், எருசலேமுக்கு சீயோன் மகள் என்னும் பெயர் அமைந்துவிட்டது. "தாவீது சீயோன் கோட்டையைக் கைப்பற்றினார். அதுவே தாவீதின் நகர்" (2 சாமு 5:7) என்பதின்படி எருசலேமுக்குத் தாவீதின் நகர் என்ற பெயரும் உண்டு.

இறைவாக்கினர்கள் இந்நகரைப் பெண்ணாக உருவகித்து "சீயோன் மகள்" என்று அழைத்தனர். இறைவாக்கினர் எசாயா "என் தலைவர் **சீயோன் மகளின்** தீட்டைக் கழுவித் தூய்மைப்படுத்துவார்; நீதியின்படி தீர்ப்பிடும் அவரது தன்மையாலும் நெருப்புத் தணலையொத்த அவரது ஆற்றலாலும் எருசலேமின் இரத்தக் கறைகளைக் கழுவி அதனைத் தூய்மைப்படுத்துவார்" (எசா 4:4) என்று எருசலேம் நகரைக் குறித்து இறைவாக்குரைத்தார்.

அதுபோல, இறைவாக்கினர் எரேமியாவும் "மகளே சீயோன், அவர்கள் போருக்கு அணி வகுத்து குதிரைகள் மீது வருகின்றார்கள்; சவாரி செய்துகொண்டு உனக்கெதிராய் வருகின்றார்கள்" (எரே 6:23) என்று அந்நகர மக்களை எச்சரித்தார்.

ஆனால், செப்பனியா, செக்கரியா என்னும் இரண்டு இறைவாக்கினர்களின் இறைவாக்குகள்தான் அன்னை மரியாவுக்கு முன்னோடியாக எருசலேம் நகரைக் காட்டுகின்றன. இறைவாக்கினர் செப்பனியா கி.மு. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறைவாக்குரைத்தவர். இஸ்ரயேலர்கள் தங்கள் கடவுளை மறந்துவிட்டு, வேற்றுத் தெய்வங்களை வழிபட்டதற்காகத் தண்டிக்கப் படுவர். அவர்களின் தலைநகரான எருசலேம் இறைவனுக்கெதிரான செயல்களுக்காக அழிக்கப்படும் என்பதுதான் செப்பனியாவின் முதன்மையான இறைவாக்கு.

இருப்பினும், இறைவாக்கின் நிறைவாக ஒரு நம்பிக்கைச் செய்தியையும் அவர் முன் வைத்தார். ஒருநாள் எருசலேம் முன்னைய நன்னிலைக்கு உயர்த்தப்படும். பணிவும் நேர்மையும் மிக்க மக்கள் அங்கு மீண்டும் வாழ்வார்கள். மூன்றே மூன்று அதிகாரங்கள் மட்டுமே கொண்ட இந்நூலின் இறுதிப் பகுதி (3:14-26) மட்டுமே இந்த நேர்மறையான, மகிழ்ச்சிச் செய்தியைக் கொண்டுள்ளது. இப்பகுதிக்கு விவிலியலாளர்கள் 'மகிழ்ச்சிப் பாடல்' என்று தலைப்பிட்டுள்ளனர். இந்த மகிழ்ச்சிப் பாடலின் முதல் வரிகள்தான் "**மகளே சீயோன்!** மகிழ்ச்சியால் ஆர்ப்பரி; இஸ்ரயேலே! ஆரவாரம் செய்; **மகளே எருசலேம்!** உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி" (செப் 3:14) என்பவை. இவ்வாறு, எருசலேம் நகருக்கு நம்பிக்கையும், நற்செய்தியும் வழங்கப்படுகின்றன.

இறைவாக்கினர் செக்கரியா பெயரில் அமைந்துள்ள நூல் 14 அதிகாரங்களைக் கொண்ட சற்று பெரிய நூல். இதன் முதல் எட்டு அதிகாரங்களில் எருசலேமின் மீட்பு, கோவில் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்ற வாக்குறுதி, இறைமக்கள் தூய்மைப் படுத்தப்படுவர் என்ற அறிவிப்பு, மெசியாவின் வருங்கால ஆட்சி ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் தான் சிதறுண்ட இஸ்ரயேல் மக்களுக்கு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் ஊட்டும் வண்ணம், "**மகளே, சீயோன்!** அகமகிழ்ந்து ஆர்ப்பரி; இதோ நான் வருகிறேன்; வந்து உன் நடுவில் குடிகொள்வேன்" (செக் 2:10) என்று ஆண்டவர் பெயரால் இறைவாக்குரைக்கிறார் செக்கரியா.

அவரே மீண்டும், "**மகளே சீயோன்!** மகிழ்ந்து களிகூரு; **மகளே எருசலேம்!** ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்; கழுதையின் மேல், கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறி வருகிறவர்" (செக் 9:9) என்று பறைசாற்றுகிறார்.

புதிய ஏற்பாட்டில் நற்செய்தியாளர் யோவான் செக்கரியாவின் மேற்கண்ட வரிகளை மேற்கோளாகப் பயன்படுத்துகிறார். இயேசு ஒரு கழுதைக் குட்டியின்மேல் அமர்ந்து எருசலேம் நகரினுள் நுழைந்தபோது, "**மகளே சீயோன்,** அஞ்சாதே! இதோ! உன் அரசர் வருகிறார்; கழுதைக் குட்டியின்மேல், ஏறி வருகிறார்' என்று மறைநூலில் எழுதியுள்ளதற்கேற்ப அவர் இவ்வாறு செய்தார்" (யோவா 12:15) என்று செக்கரியாவின் இறைவாக்கு இயேசுவின் கழுதைப் பயணத்தில் நிறைவு பெற்றதை சுட்டிக்காட்டுகிறார்.

சீயோன் மகள் என்னும் எருசலேம் நகரை அன்னை மரியாவின் முன்னோடியாகத் திருஅவைத் தந்தையர் பார்த்தனர். அதன் விளைவாக திருவருகைக் காலத் திருப்பலிகளில் வாசகங்களிலும், மன்றாட்டுகளிலும் இச்சொல் மரியன்னையைக் குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

எருசலேம் நகர் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராக விளங்குவது போலவே, அன்னை மரியாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளாக இருக்கிறார். அதுபோலவே, எருசலேம் நகரைத் தேடி வந்த மெசியாவைப் போல, இறைவன் அன்னை மரியாவைத் தேடி வந்து அவரில் குடிகொண்டார். மேலும், மெசியாவின் வருகையை முன்னிட்டு எருசலேம் அக்களித்து, அகமகிழ்வது போன்று, மரியாவும் கடவுளின் பேரிரக்கத்தை முன்னிட்டு பேருவகை கொண்டு பாடினார். எனவே, மரியன்னையை "சீயோன் மகள்" என்று அழைப்பது பொருத்தமே.



அருள்பணி. குமார்ராஜா

# இறைவனின் திருச்சமூகம்



**தோரணம்**

அனைவராலும் அன்புடனும் மகிழ்வுடனும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காகவே இறைவன் என்னைப் படைத்தார்.

படைப்பிறைவனின் மகனாக நான் வளர வேண்டுமெனில், இறைவன் என்னை அன்பு செய்கிறார் - நேசிக்கிறார் என்பதை நான் கண்டுணர வேண்டும். "அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது; ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோமை 5:5).

கிறிஸ்தவச் சமூகத்தில் வாழ்வது என்றால், தந்தையாம் கடவுளோடும், அவருடைய மகன் இயேசுவுடனும், இறை மக்களோடும் இணைந்து ஒரே இல்லத்தில் வாழ்வதாகும். ஏனெனில், கிறித்தவச் சமூகம் என்பது இறைவனின் குடும்பம்.

**'இல்லம்'** என்றால், என்னை என்னுடைய குறைநிறைகளோடு ஏற்று அன்பு செய்யும் தளம்.

என்னுடைய இலக்கு, இறைவனோடு அவருடைய இல்லத்தில் குடியிருப்பதுதான். "என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன (யோவான் 14:2). இறைவனே நமது இல்லம் என்றறிகிறோம்.

## இயல் - I

## செவி மடுக்கும் தந்தை!

ஓர் அருங்கொடை இயக்க அமர்வின்போது, ஒரு தாய் சொன்னது - "என்னுடைய கணவரிடமிருந்து எப்படி செபிப்பது என்பதைக் கற்றுக் கொண்டேன். எங்களின் சிறு மழலைமுன் குனிந்து கொஞ்சுவார்... 'அப்பா' என்று தன்னை அந்தக் குழந்தை அழைப்பதைக் கேட்க ஆவலுடனிருந்தார்....

குழந்தையின் தொட்டில் அருகில் சென்று, குனிந்து, செல்லமே, 'அம்மா'னு சொல்லு என்றார், குழந்தை கண்களால் பேசியது.... புன்னகைத்தது.... ஏதோ சொல்ல வேண்டுமென்ற ஆவலில் ...'பா'.... என்றது... தந்தைக்கு ஒரே மகிழ்ச்சி!

ஒவ்வொரு நாளும் அலுவலகம் செல்லு முன்னும், பணி முடிந்து வீடு திரும்பும்போதும், தொட்டிலருகில் சென்று, 'அப்பா' சொல்லு என்று கொஞ்சுவார்.

இதைப் பார்த்தபோது எனக்குள் ஓர் புதிய ஒளி தோன்றியது.... **"அப்பா, தந்தையே"** என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும் போது, நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார்" (உரோம 8:16).

விண்ணகத் தந்தை நம்மோடு உறவாடுகிறார்... "ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோ 5:5).

நமது செப உரையாடல், பேச்சு மொழி பழகும் ஒரு மழலையின் உளறல் போலவே உள்ளது. 'அப்பா, அப்பா' என்று மட்டுமே நம்மால் சொல்ல முடிகிறது. ஆனாலும், நம் தந்தை இதைக்கேட்டு மகிழ்ந்து போகிறார். அத்தோடு, இன்னும் நெருக்கமாக வர அழைக்கிறார்.

தம்முடைய மகனை மகிழ்ச்சியோடு தந்தை ஏற்றுக் கொண்டு, அவன்மீது அக்கறையும் பாசமும் செலுத்துவார்.

ஒரு மகன், தன்னுடைய தந்தையை முழுமையாக அன்புடன் ஏற்றுக்கொண்டு நேசித்தால் மட்டுமே, ஒரு மகனாவான். பொறுப்பும் கடமையும் ஒரு மகனுக்குரிய பண்பாகும். தந்தை - மகன் உறவு என்பது இருவரின் இணைந்த அன்புறவு. இது போன்றதுதான் இறைஉறவும்.

இறைவன் நமது தந்தை என்பதை, "நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி, "அப்பா, தந்தையே" எனக் கூப்பிடுகிறது" (கலா 4:6) என்கிறார் புனித பவுலடியார்.

"இப்பொழுது நீங்கள் கடவுளை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்; உண்மையில், கடவுளே உங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்" (கலா 4:9).

கடவுளின் அன்பு, அவருடைய திருமகன் வழியாக நமக்குப் புலப்படுத்தப்பட்டிருக்கிறது. "நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்" (யோவா 10:14-15). "என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளதுபோல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள் (யோவா 15:9).

"அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார். இதுவே அவரது விருப்பம்; இதுவே அவரது திருவுளம்" (எபே 1:5-6). இந்த இறைமகன் வழியாகவே நாம் தந்தை இறைவனோடு தொடர்பு கொள்கிறோம். "என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா 14:6) என்கிறார் இயேசு.

ஒரு தந்தை என்பவர் முதன்முதலாகச் செவிமடுப்பவர்; தன்னுடைய குழந்தைகளை ஏற்றுக்கொண்டு அரவணைப்பவர். விண்ணகத் தந்தையும் நமது குரலையும், அழுகையையும் செபவேளையின்போது கேட்பதற்கு ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார். அதேபோல், குழந்தையும் தந்தையின் அன்பிற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

நமது குடும்பங்களில் நாம் சொல்வதுண்டே..... "எங்கள் குடும்பத்தின் முக்கியமான பிரமுகர் இந்தக் குழந்தைதான்" - என்று.... அந்தக் குழந்தையின் அழுகுரலுக்கு உடனே, செவிமடுத்து தேவையான உதவிகள் செய்ய முன்வருகிறோமே! குடும்பத்தில் உள்ள அனைவரின் கவனத்தையும் அந்தக் குழந்தை ஈர்க்கிறதே!

குழந்தைப் பருவத்தில் மட்டும் கவன ஈர்ப்பு போதுமானதா? அந்தக் குழந்தையின் வாழ்நாளெல்லாம் தேவைப்படாதா? அந்தக் குழந்தை பக்குவம் பெறும்வரை பெற்றோரின் பணி தொடருமே. எப்போது ஒரு தகப்பன் தன்னுடைய மகனின் குரலை மதிக்கவில்லையோ, அப்போது அந்த மகனும் தந்தையின் குரலுக்குச் செவிமடுக்க மறுக்கிறான்.

ஒரு நல்ல தகப்பன் எப்போதும் அன்புடன் தன் பிள்ளைகளின் குரலைக் கேட்பதில் ஆவலாயிருப்பார். *-தொடரும்.*

***"COMMUNITY IN THE LORD'***
***- PAUL HINNERBUSCH, O.P.***
***- நூலைத் தழுவி எழுதியது***

**கலாபன் வாஸ்**





## புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில்



# மரபுகளும் மாற்றங்களும் 2

பங்கு மக்களிடையே விளங்கிய ஏற்றத் தாழ்வுகள், கத்தோலிக்க இறைநம்பிக்கைக்கு எதிரான மூடப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை உடைப்பதில் அதிக ஆர்வம் காட்டிய இன்னொரு பங்குத் தந்தை ஞானமும், படைப்பாற்றலும் மிக்க அருள்தந்தை **பவுல் அலங்காரம்** (1942-1952) அடிகளார். "ஏழைகளின் தந்தை" என்று போற்றப்பெறும் தந்தை பவுல் அலங்காரம் அவர்களால் மக்களின் மனநிலையில் பல தாக்கங்களை ஏற்படுத்த முடிந்தது என்பதற்கு முந்தைய தலைமுறையினர் சான்று பகர்ந்துள்ளனர்.

இப்பேராலயப் பங்கின் மரபுகளில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய புரட்சியாளராக அருள்தந்தை **லாம்பர்ட் மிராந்தா** (1979-1984) அவர்களைச் சொல்லலாம். உரோமையில் இறையியல் பயின்று முனைவர் என்னும் பெருமைக்குரிய தந்தை மிராந்தா இறையியல் வல்லுநர், இசைஞர், காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்து தேவைகளை நிறைவேற்றிய ஆற்றலாளர் என்னும் பெருமைகளுக்குச் சொந்தக்காரர். அவர்கள்தான் பனிமய அன்னையின் தொன்மை வாய்ந்த இத்திருத்தலத்தை "மைனர் பசிலிக்கா" என்னும் பெருமைக்கு உயர்த்தியவர்கள். உரோமையிலுள்ள மேரி மேஜர் பசிலிக்காவுடன் இத்திருத்தலத்தை இணைத்தவரும் அவர்களே. இந்த ஒரு செயலால் இத்திருத்தலத்தின் கடந்த கால வரலாற்றை உலகிற்கு எடுத்துச் சொன்னதோடு, எதிர்கால ஏற்றத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள் என்று சொல்வது மிகையே அல்ல.

புனித பனிமய அன்னையின் திருவுருவத்திற்குத் திரையிட்டு மறைத்து, திருவழிபாட்டின் சில நேரங்களில் மட்டுமே அன்னையின் அழகிய திருமுகத்தைத் தரிசிக்க முடியும் என்ற நெடுங்கால மரபை உடைத்த பெருமை தந்தை அவர்களையே சாரும். இப்பேராலயம் "பசிலிக்கா"வாக உயர்த்தப்பட்டுவிட்டதால், திருப்பயணிகள் எந்நேரமும் இத்திருத்தலத்திற்கு வரலாம், அன்னையின் திருமுகம் கண்டு மகிழலாம், மன்றாடலாம் என்னும் நோக்கத்தை அவர்கள் மக்களிடம் விளக்கிச் சொல்லி அந்த மகத்தான மாறுதலை ஏற்படுத்தித் தந்தார்கள். அன்னாருக்கு நாம் அனைவருமே நன்றிக் கடன்பட்டிருக்கிறோம். பழையனவற்றையே பற்றிக்கொண்டு புதியனவற்றை ஏற்க மறுக்கும் "பழமைவாதிகள்" எக்காலமும், எல்லா இடங்களிலும் உள்ளனர் அல்லவா? அத்தகையோர் அக்காலத்தில் எத்தகைய கூக்குரல்களை எழுப்பியிருப்பார்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருப்பார்கள் என்று நாம் கற்பனை செய்துகொள்ளலாம். ஆனாலும், தந்தை மிராந்தா இந்த மாற்றத்தி;ல் உறுதியாயிருந்து, மக்களின் மனங்களையும் வென்று காட்டினார். வாழ்க அவரது புகழ்!

பங்குத் தந்தையின் ஒற்றைத் தலைமையின் கீழ் இயங்கி வந்த பேராலய நிர்வாகத்தை, பங்கேற்பு அமைப்புகளின் வழியாக மாற்றியமைத்த பெருமை **அருள்தந்தை இரத்தினராஜ்** (2000-2004) அவர்களைச்

சாரும். பல எதிர்ப்புகளையும் கடந்து, தந்தை அவர்கள் உருவாக்கிய பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழு, நிதிக் குழு ஆகியன ஐந்து முறை சிறப்பாகப் பணியாற்றி, இப்போது ஆறாவது குழு பணியாற்ற முன் வந்துள்ளது. இந்தப் பங்கேற்பு அமைப்புகளால் பேராலயப் பணிகளும், நிதி மேலாண்மையும் வெளிப்படைத் தன்மையோடும், கூடுதல் பொறுப்புப் பங்கேற்போடும் நடத்தப் படுகின்றன என்பது பெருமிதம் தருகின்றது.

ஏழு கடற்துறையின் வரலாற்றோடும், கடலோர மக்களின் வாழ்வோடும் பின்னிப் பிணைந்தது பனிமய அன்னைப் பேராலயம் என்பதை வரலாறு நமக்கு எடுத்துச் சொல்கிறது. எனவே, கடந்த 400 ஆண்டுகளுக்கும் மேலாக, "ஏழு கடற்துறையின் ஏக அடைக்கலத் தாய்" என்னும் பெருமைமிகு பெயருக்குத் சொந்தக்காரியாய் விளங்கி வருகிறார் நம் பனிமய அன்னை. இருப்பினும், இரண்டாம் புத்தாயிரம் பிறந்த பின்னர் "ஏழு கடற்துறையோடு எல்லா மக்களுக்கும் ஏக அடைக்கலத் தாய்" என்று நம் தாய் எல்லாருக்கும் தாய் என்று பெயர் மாற்றம் பெற்றார். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்த பெருமை **அருள்பணி. ஜெரோசின் அ. கற்றார்** (2004-2008) அவர்களைச் சாரும். இந்த மாற்றத்துக்கும் தொடக்க காலங்களில் எதிர்ப்புகள் எழுந்திருக்கும். ஆனால், இன்று இந்தப் பெயர் நிலைபெற்றுவிட்டது.

பல மரபுகளை உடைத்தும், சில மரபுகளை மாற்றியும், புதிய மரபுகளை உருவாக்கியும் பணியாற்றினர்கள் தொடர்ந்து வந்த **அருள்தந்தை வில்லியம் சந்தானம்** (2009-2014). பனிமய அன்னையின் தங்க ஆபரணங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் திருடப்பட்டிருந்தன. பின்னர், காவல் துறையினர் திருப்பித் தந்த நகைகளோடு, காணிக்கையாக வந்த இதர பொன் காணிக்கைகளையும் சேர்த்து "பன்னிரு தாரகை" என்னும் பிரம்மாண்டமான பொன் ஆபரணத்தை அன்னைக்கு அணிவித்து அழகு பார்த்தார்கள். மேலோட்டமாகப் பார்த்தால், இது ஒரு சாதாரண நிகழ்வாகத் தெரியும். ஆனால், புதிய மரபு ஒன்றின் தொடக்கம் என்பதை அன்று யாரும் உணர்ந்திருக்க மாட்டார்கள். தற்பொழுதோ, அன்னைக்குக் காணிக்கையாக வரும் சிறிய நகைகளெல்லாம், ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பெரிய ஆபரணமாக மாற்றப்படுவது எதிர்பார்க்கப்படும் ஒரு மரபாக மாறிவிட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019-2024) இவ்வாறு மூன்று முறை (2022, 2023, 2024) பனிமய அன்னைக்கு ஆபரணங்கள் செய்யப்பட்டன. இந்த மரபு தொடரும் என்று நம்பலாம்.

திருவருகைக்காலம், தவக்காலம் என்னும் தடைக் காலங்களில் பேராலயத்தில் திருமணங்கள் நடைபெறா என்னும் புதிய நல்லதொரு மரபை உருவாக்கிய பெருமையும் அருள்பணி. வில்லியம் சந்தானம் அவர்களையே சாரும். இம்மரபு இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மரபுகளை சீர்திருத்தும் பணியையும் அருள்பணி. வில்லியம் சந்தானம் அவர்கள் துணிவுடன் செய்தார்கள். திருச்சிலுவை சிற்றாலயத்தில் 10 நாள்கள் நடைபெற்ற திருச்சிலுவை விழாவை மூன்று நாள் விழாவாக மாற்றினார்கள். அதுபோலவே, தனியாரின் வசதிக்காக நடைபெற்ற "சிறப்புத் திருப்பலிகளை" பேராலயத்திலிருந்து திருச்சிலுவை சிற்றாலயத்துக்கு மாற்றினார்கள். இவையெல்லாம் எத்துணை நல்ல மாற்றங்கள் என்பதை இன்று உணர்கிறோம்.



அருள்பணி. குமார்ராஜா

# அம்மா!



கனிவுரு வடிவம் நீ கருணைமிகு உருவம் நீ
காவியச் சுடரும் நீயே அம்மா!
காவிய நாயகன் எமதுயிர்க் காவலன்
இயேசுவின் அன்னை நீயே அம்மா!
திரைகடல் ஓடியே திரவியம் தேடிடும்
மாந்தரின் துணையும் நீயே அம்மா!
கரையேதும் காணாமல் திசைமாறி செல்கையில்
கலங்கரை விளக்கம் நீயே அம்மா!
ஈரைந்து மாதமும் மடிதனில் சுமந்து நீ
ஈன்றாய் எம் தேவசுதனை நீயே அம்மா!
ஈனர்கள் எங்களின் கொடும்பாவம் தீரவே
ஈந்தாயே பலியாய் மகனை நீயே அம்மா!
அம்மா உன் அன்புபோல் இன்றுவரை நாளுமே
அடியோர்கள் கண்டதில்லையே அம்மா!
அன்னையே உன்பாதம் நித்தமே தொழுதாலே
என்றுமே நன்மை தாயே அம்மா!
இகபரன் தேவி நீ இயற்கையின் தலைவி நீ
ஈடில்லா அன்பு ராணி நீயே அம்மா!
இயலாத முதியவர் உடல் ஊனமுற்றவர்
இதயத்தின் காவல் ராணி நீயே அம்மா!
இன்னமும் உன் புகழ் பாடவே மொழியிலே
வார்த்தையே இல்லையே அம்மா!
இருள்தனை நீக்கியே அருள்தனை பொழிந்திடும்
அருள்மிகு அன்னை நீயே அம்மா!
திருச்சுதனை ஈன்ற குணவதியே உன்
திருப்புகழ் எழுதுவதும் ஓர் சுவையே அம்மா!



பெனாட்

பனிமய பங்குத் தந்தையர் 5

# அருள்முனைவர் குமார்ராஜா



கடந்த 25 ஆண்டுகளில் அருள்தந்தையர் இரத்தினராஜ், ஜெரோசின், வில்லியம் சந்தானம், லெரின் டிரோஸ் ஆகியோர் வளர்த்தெடுத்த பனிமயம் இதழைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக (2019-2024) பராமரித்து, அதன் வெள்ளிவிழாவையும் கொண்டாடும் பெருமிதத்துக்குச் சொந்தக்காரர் அருள்பணி. குமார்ராஜா அவர்கள்.

முன்னர் "ஞானதூதன்" இதழின் மேலாளர் மற்றும் இதழாசிரியராக ஆறு ஆண்டுகள் (1998-2004) பணியாற்றிய அனுபவம் அவர்களுக்குக் கை கொடுத்துள்ளது. எனவே, 2019ஆம் ஆண்டு பங்கில் பொறுப்பேற்ற முதல் இதழிலேயே பனிமயம் இதழ் "பனிமயத் தாயின் புகழ் பரப்பும் கருவியாகவும், பேராலயப் பங்கு மக்களின் தகவல் தொடர்பு ஊடகமாகவும் செயல்படும்" என்று தமது "பனிமயத் தாயின் பாதத்திலிருந்து" என்னும் ஆசிரியர் பக்கத்தில் எழுதியுள்ளார்.

அதன்படியே பனிமயத் தாயின் புகழ் பரப்பும் "மரியன்னைப் புனிதர்கள்" தொடரை ஆசிரியரே தொடர்ந்து எழுதினார்கள். அன்னாரின் ஆஸ்தான எழுத்தாளர்களான திருவாளர்கள் செல்வராஜ் மிராந்தா, கலாபன் வாஸ், சொர்ணராஜன் விக்டோரியா ஆகியோர் கடந்த ஐந்து ஆண்டு முழுவதும் எழுதியிருக்கிறார்கள்.

"பனிமய சாட்சியங்கள்" என்னும் பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 100 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது பனிமய அன்னையைப் பெருமைப்படுத்தும் ஓர் ஆவணமாகத் திகழ்கிறது.

"மாதம் ஒரு மாதா படம்" என எல்லா மாதங்களிலும் வாசகர்களின் கைவண்ணத்தில் உருவான வெவ்வேறு மாதா படங்கள் அச்சிடப்பட்டுள்ளன. அவ்வப்போது புகழ்பெற்ற ஓவியர் 'ஜெ' (ஜெயராஜ்) அவர்களின் படங்களும் நம் கவனத்தை ஈர்க்கின்றன.

மேலும், பங்கின் தொடர்பு ஊடகமாகவும் கடந்த 5 ஆண்டுகளில் பனிமயம் செயல்பட்டிருக்கிறது. "பனிமயப் பகிர்வு" என்னும் பகுதியில் திருவழிபாட்டுச் செய்திகள், பனிமயச் சுவடுகள் என்னும் பகுதியில் பங்கின் 500 முக்கிய நிகழ்வுகள், பங்கில் அருள்சாதனங்கள் பெற்றுக்கொண்டவர்கள், அடுத்த மாதத்துக்கான நிகழ்வுகள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது ஒரு சிறப்பு.

குறிப்பிடத்தக்க இன்னொரு சிறப்பு பனிமயம் இதழ் ஒவ்வொன்றும் மின்னஞ்சல் மற்றும் புலனம் (ஈமெயில், வாட்ஸ் அப்) வழியாக மாதந்தோறும் பலருக்கும் அனுப்பப்படுவது, கூடுதலாக, பனிமய அன்னைப் பேராலய இணையதளத்திலும் கடந்த ஐந்தாண்டுகளின் அனைத்து இதழ்களும் எதிர்காலத் தலைமுறைக்காக மின்வடிவத்தில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது இதுவரை இல்லாத சிறப்பு.

இதழின் வெள்ளிவிழாவை முன்னிட்டு "பனிமயம் வெள்ளிவிழா மலர்" வெளிவருவது தந்தையின் எழுத்துப் பணியின் முத்தாய்ப்பு என்று சொல்லலாம்.

**கலாபன் வாஸ்**

# புனித பனிமய அன்னைப் பேராலயத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் (2019-2024) சிறந்த 10 நிகழ்வுகள்

1. **தங்கத் தேர்ப் பவனி.** யோசேப்பைத் "தன் இரண்டாம் **தேரில் வலம்வரச்** செய்து 'இவருக்கு முழந்தாளிடுங்கள்' என்று ஏவலர் கட்டியம் கூறச் செய்தான்; இவ்வாறு எகிப்து நாடு முழுவதற்கும் அவரை அதிகாரியாக்கினான்" (தொநூ 41:43).

   கடந்த ஐந்து ஆண்டுகளின் மாபெரும் நிகழ்வு - 16ஆவது பவனி. 2013க்குப் பிறகு. அன்னையை மகிழ்ச்சிப்படுத்த அல்ல, அன்னையின் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காக. ஏறக்குறைய 75 விழுக்காடு தேர் புதிதாகச் செய்யப்பட்டது. காவல்துறை அறிக்கையின்படி 2 இலட்சம் மக்கள் பங்கேற்பு. வெளிநாடுகளிலிருந்து நேர்ச்சை. மாநகர விழா - எல்லா மக்களும் கலந்துகொண்டனர். அமைச்சர், ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அனைவரும் உரிமையோடு. சமய நல்லிணக்கம் - அரசு நிர்வாகத்தின் ஒத்துழைப்பு.

2. **தங்கத் தேர்ப் பெருவிழா.** "அவர்கள் திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது எருசலேமில் அவர் செய்தவை அனைத்தையும் கண்டிருந்தனர்" (யோவா 4:45).

   441ஆவது பெருவிழா - நாள்தோறும் ஓர் ஆயர் வருகை - இலங்கையிலிருந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் ஃபர்னான்டோ - கோவா கர்தினால் மேன்மைமிகு பிலிப் நேரி - ஆண்டவரின் வியத்தகு செயல்களை அனைவரும் கண்டனர். 300 நாள் தொடர் மன்றாட்டு, 100 நாள் மன்றாட்டு, 30 நாள் நோன்பு ஆராதனை.

3. **திருத்தந்தையின் தூதுவர் வருகை.** "ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்! ஆண்டவரது இல்லத்தினின்று உங்களுக்கு ஆசி கூறுகிறோம்" (திபா 118:26).

   கடந்த 2000ஆம் ஆண்டில் பேராலயம் வருகை தந்த திருத்தந்தையின் தூதுவர் பேராயர் **லொரன்சோ பல்திஸ்ஸேரி** அவர்களுக்கு அடுத்தபடியாக, 23 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 11.06.2023 ஞாயிறு அன்று திருத்தந்தையின் தற்போதைய இந்திய மற்றும் நேபாள நாடுகளின் தூதுவர் பேராயர் **லெயோபோல்தோ ஜிரெல்லி** பனிமய அன்னையின் பேராலயம் வருகை தந்தார். பேராலயப் பங்கு எல்லையில் அன்னாருக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டு, திறந்த ஜீப்பில் பவனியாக அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து, பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

   திருப்பலியின் நிறைவில் பனிமய அன்னையின் திருச்சுரூபத்திற்கு வணக்கம் செலுத்தி, ஆசி வழங்கினார்கள். தங்கத் தேர்ப் பிறைக்கும் வருகை தந்து, புதிதாகச் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருந்த தேரைப் பார்வையிட்டு, பின்னர் புனித நீரால் தெளித்து ஆசி வழங்கினார்கள்.

   அதை முன்னிட்டு பனிமய அன்னையின் திருச்சுரூபம் பத்ராசனத்திலிருந்து இறக்கப்பட்டு, பீடத்தில் இறைமக்களின் நெருங்கிய பார்வைக்காக ஜூன் 10, 11 இரண்டு நாள்கள் வைக்கப்பட்டிருந்தது.

**4. அன்னைக்குப் புதிய ஆபரணங்கள்.** “ஓபீரின் பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி” (திபா 45:9).

கடந்த 5 ஆண்டுகளில் 60 பேர் பனிமய அன்னைக்கு நன்றிக் காணிக்கையாக தங்க நாணயங்கள் அல்லது நகைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகளைக் கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று முறை (2022, 2023, 2024) மொத்தமாக 248 பவுனில் அன்னைக்கு ஆபரணங்கள் செய்து அணிவிக்கப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டு 200 பவுனிலும், 2023 தங்கத் தேர்ப் பவனியின்போது 28 பவுனிலும், 2024ல் 20 பவுனில் ஒரு தங்க செபமாலையும் செய்யப்பட்டுள்ளன.

22 ஆண்டுகளுக்கு முன் திருடுபோன சகாய மாதா படத்தைப் போன்ற ஒரிஜினல் சகாயமாதா படம் முன்னாள் பங்குத் தந்தை **அருள்திரு. இராபின்ஸ்டன்** அவர்களால் திரு. ஜெனோ ரவேல் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தப் புதுமைப் படம் இப்பொழுது புதுப்பிக்கப்பட்டு, சிறு தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பேராலயத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்படத்தில் **87.810 கிராமில்** (ஏறக்குறைய 11 பவுன்) பின்வரும் தங்க ஆபரணங்கள் செய்யப்பட்டன.

சகாயமாதா கிரீடம், சகாயமாதா நட்சத்திரம், மாதா கம்மல் ஒன்று, மாதா பவள நெக்லஸ் ஒன்று, முத்து, கல் வளையல் ஒன்று, மாதா சிறிய மோதிரங்கள் 5, பாலன் கிரீடம், பாலன் நெக்லஸ் ஒன்று, பாலன் மோதிரங்கள் 2, பாலன் செருப்பு வார்கள் 3, வானதூதர் நெக்லஸ் ஒன்று, வானதூதர் சிறிய பொன் துகள்

மேற்கண்டவற்றின் மொத்த தொகை **ரூ. 4,65,000/-**. இந்தப் படம் 20.02.2022 ஞாயிறு அன்று சகாய மாதா பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, அர்ச்சிக்கப்பட்டது.

நமது பங்கின் புனித பொம்பெயி செபமாலை மாதா பக்த சபையினரின் முன்னெடுப்பில் பேராலய பொம்பெயி மாதா திருவுருவப் படத்தில் **நான்கரை பவுன்** (36 கிராம்) தங்கத்தில் 10 சிறிய நகைகள் செய்யப்பட்டு, கிறிஸ்து பிறப்பின் அறிவிப்புப் பெருவிழாவான **08.04.2024** திங்கள் அன்று பேராலயத்தில் மீண்டும் வைக்கப்பட்டது.

**5. கூட்டுத் திருமணங்கள்.** “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத் 25:40).

மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பனிமயத் தாய்க்கு சீர்மிகு வாழ்த்தாக 14 மண இணையர்களுக்கு 08.05.2022 அன்று ரூ. 45 இலட்சம் செலவிலும், தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டுப் பனிமயத் தாய்க்கு சீர்மிகு வாழ்த்தாக 25 மண இணையர்களுக்கு 20.08.2023 அன்று ஒரு கோடி ரூபாய் செலவிலும் இலவசத் திருமணம் நடத்தப்பட்டது.

**6. அறச் செயல்கள்.** “அவர்கள் வாரி வழங்கினர்; ஏழைகளுக்கு ஈந்தனர்; அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்; அவர்களது வலிமை மாட்சியுடன் மேலோங்கும்” (திபா 112:9).

- ஐந்து வீடுகள் 25 இலட்சத்தில்
- கொரோனா கால, பெருவெள்ள கால உதவிகள்

- ❖ கல்வி, மருத்துவம், திருமணம், வாழ்வாதாரம், அடக்கச் செலவுகள்
- ❖ கோவில்கள் கட்ட நன்கொடை
- ❖ ரொசேரியன் மௌன மடம், கார்மேல் மௌன மடக் கன்னியர் இல்லங்கள், ஏழை மாணவர் விடுதிகள், தொழுநோயாளர் மருத்துவமனை எனக் கடந்த 5 ஆண்டுகளில் **ஒரு கோடியே, ஐம்பது இலட்ச ரூபாய்** பேராலயத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**7. பனிமய நோன்பு வழிபாடுகள்.** "இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பெத்தேலுக்கு வந்து ஆண்டவர் திருமுன் அமர்ந்து அன்று மாலைவரை உண்ணாநோன்பு இருந்தனர். மேலும் அவர்கள் எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் ஒப்புக்கொடுத்தனர்" (நீத 20:26).

கடந்த 44 மாதங்கள் மாதந்தோறும் ஒரு கருத்துக்காக 3 மணி நேர நோன்பு வழிபாடு. குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக, திருமண வரனுக்காக, வேலை வாய்ப்புக்காக, நெடுநாள் நோயாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்காக, தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்காக.... எத்தனையோ புதுமைகள். 100 சாட்சியங்கள் பனிமயம் இதழில் அச்சிடப்பட்டுள்ளன.

**8. விவிலியப் பாசறைகள்.** "புதிதாய்ப் பிறந்த குழந்தைகள்போல, வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள்" (1 பேது 2:2).

கடந்த 5 ஆண்டுகளில் 104 விவிலியப் பாசறைகள். சராசரியாக 50 பேர் பங்கேற்பு. இறைவார்த்தை ஆர்வம். விவிலியப் போட்டியில் தொடர்ந்து வெற்றி பெற்ற 85 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**9. இறைப்புகழ்ச்சியும், இறைவேண்டல்களும்.** "அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப்பலியைச் செலுத்துவோமாக, அவருடைய பெயரை அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும்" (எபி 13:15).

ஐந்து ஆண்டுகளாக அனைத்துத் திருப்பலிகளிலும் நற்கருணைத் திருவிருந்திற்குப் பிறகு இறைபுகழ்ச்சி. பெருவிழா நாள்களில். இறையடியார்களுக்காக 1000 நாள் தொடர் மன்றாட்டு. இறைவேண்டல் ஏடுகள். இறைமொழி மன்றாட்டு ஏடு. பனிமய அன்னைக்கு 2 புதிய மன்றாட்டுகள் வழியாக இறைவேண்டல் ஊக்கப்படுத்தப்பட்டது.

**10. தவக்காலத் திருநிகழ்வுகள்.** "தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்' எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்" (2 கொரி 6:2).

வியாழன் தியான உரைகள், ஏழு தலையான பாவங்கள், ஒப்புரவு அருள்சாதனம், மங்கலகிரியில் ஒருநாள் தியானம், சாம்பல் புதனன்று 12.00 முதல் 03.00 வரை நோன்பு வழிபாடு, குருத்து ஞாயிறு அன்று 11.00 முதல் 03.00 வரை "சிலுவையிலிருந்து 7 வார்த்தைகள்" நோன்புத் தியானம் ஆகியன நடத்தப்பட்டன.

# அழகின் முழுமை நம் அம்மா!

மாதம் ஒரு மாதா படம் 48



J.Y. ருபீனா
குரூஸ்புரம்



# பனிமய சாட்சியங்கள்

**பனிமய சாட்சியம் : 97**

## அந்தோணி செல்வி, அந்தோணியார்புரம்

என் மகள் கருவுற்றிருக்கும்போது வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு விதைப்பையில் நீர் தேங்கியிருக்கிறது என்றும், குழந்தை பிறந்த பிறகு இந்த பிரச்சனை சரியாக வாய்ப்பு இருக்கிறது என்றும் மருத்துவர் சொன்னார். ஆனால் குழந்தை பிறந்த பிறகு சரியாகவில்லை. எனவே, அறுவைசிகிச்சை செய்யும்படி அறிவுறுத்தினார்கள். நாங்கள் மேற்சிகிச்சைக்காக சென்னை செல்ல வேண்டியிருந்தது. ஊருக்கு செல்வதற்கு முன்பு பனிமயத் தாயிடம் வந்து குழந்தைக்கு அறுவை சிகிச்சையின்றி பூரணநலம் கிடைக்கவேண்டுமென்று நானும் என் மகளும் வேண்டிக் கொண்டோம். சென்னைக்கு சென்று மருத்துவரிடம் ஆலோசித்தபோது தற்போது அறுவை சிகிச்சை வேண்டாம் என்றும், ஆறு மாதம் கழித்து அறுவைசிகிச்சை மேற்கொள்ளலாம் என்றும் கூறினார்கள். மீண்டும் நான் அன்னையிடம் மிகுந்த நம்பிக்கையுடன் அறுவை சிகிச்சையின்றி பேரனுக்கு நலம் தர மனமுருகி வேண்டிக் கொண்டேன். பனிமயத் தாயின் அருளால் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றபோது அறுவை சிகிச்சை தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த சாட்சியத்தை நான் பனிமய அன்னையின் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். பனிமயத் தாயே உமக்கு நன்றி!



**பனிமய சாட்சியம் : 98**

## அமலா, ஸ்டேட் பாங்க் காலனி

என் கணவருக்கு வயது 75. அவருக்கு பித்தப்பையில் கல் உருவானதால் வயிற்று வலியால் மிகுந்த வேதனை அடைந்தார். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்துதான் கல் அகற்ற முடியும் என்றனர். நான் பனிமய அன்னையிடம் வேதனையுடன் வேண்டினேன். அன்னையின் பரிவிரக்கத்தால் அறுவை சிகிச்சையின்றி மாத்திரை மற்றும் மருந்து மூலமாக கல் முற்றிலுமாக நீங்கியது. என் கணவர் ஆரோக்கியத்துடன் வாழ தயை புரிந்த அன்னைக்கு என் நன்றியை இந்த சாட்சியம் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன். பனிமயத் தாயே நீர் வாழ்க!

பனிமய சாட்சியம் : 99

## சந்திர மோகன் – புனித ராணி, கோயம்புத்தூர்

எங்களுக்குத் திருமணமாகி 18 வருடம் ஆகின்றது. 10 ஆண்டுகளுக்கு முன் 2014ஆம் ஆண்டு பனிமய அன்னையிடம் குழந்தை வரம் வேண்டி மிகுந்த வேதனையுடன் மன்றாடினோம். திருமணமாகி 15 ஆண்டுகள் கழித்து 2021ஆம் ஆண்டு பனிமயத் தாயின் இரக்கத்தாலும், கருணையாலும் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. 100 கோவில்களில் சாட்சியம் சொல்ல முடிவெடுத்தோம். பனிமயத் தாயின் கோவில் எங்களது 64ஆவது சாட்சி ஆகும். பனிமயத் தாயே உம் புகழ் வாழ்க!

பனிமய சாட்சியம் : 100

## திருமதி. சதா ஜோபாய்

**ஆசிரியை, தூத்துக்குடி**



கடந்த 30.04.2023 அன்று எனது மகளின் 2 பவுன் தங்க நெக்லஸ் காணாமல் போய்விட்டது. எங்கு தொலைந்தது என்று தெரியாமல் எல்லா இடங்களிலும் தேடி அலைந்தோம். அன்னையின் பேராலயத்திலும் வந்து தேடினோம். பனிமயத் தாயிடம் மனமுருகி நகை கிடைக்குமாறு வேண்டிக்கொண்டோம். 13.03.2024 அன்று, ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்து, வீட்டின் பின்புறத்தில் அந்த நகை கண்டெடுக்கப்பட்டது. 11 மாதங்களாக கிடைக்காத நகை தாயின் தயவால் கிடைத்தது. மரியே வாழ்க. இயேசுவுக்கே புகழ். பனிமயத் தாயே உமக்கு நன்றி!

பனிமய சாட்சியம் : 101

## ஜான் பேட்ரிக் டேனியல் – செலஸ்டினா

எங்களுக்கு கடந்த 2019ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று, நான்கு ஆண்டுகள் குழந்தை இல்லாமல் தவித்தோம். 2023ஆம் ஆண்டு மே மாதம் பேராலயத்தில் நடைபெற்ற "குழந்தைச் செல்வத்துக்கான" பனிமய நோன்பு வழிபாட்டில் கலந்துகொண்டு பனிமயத் தாயிடம் மன்றாடினோம். பனிமயத் தாயின் பரிந்துரையால் ஆண்டவர் எங்களுக்கு குழந்தைச் செல்வத்தை அருளினார். இயேசுவே உமக்கு நன்றி. பனிமயத் தாயே நீர் வாழ்க!

## விவிலியப் போட்டி 110 ஏப்ரல் 2024 விடைக்குறிப்புகள்

### 1 மக்கபேயர் 1-3

| | | | |
|---|---|---|---|
| 1. யூதா | 1மக் 3:19 | 6. சிமியோன் | 1மக் 2:65 |
| 2. சம்மட்டி | முன்னுரை | 7. எலியா | 1மக் 2:58 |
| 3. யோவான் | 1மக் 2:1 | 8. அலக்சாண்டர் | 1மக் 1:1 |
| 4. யூதா | 1மக் 3:60 | 9. யோசுவா | 1மக் 2:55 |
| 5. மத்தத்தியா | 1மக் 2:23 | 10. கசிதேயன் | 1மக் 2:42 |

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 191**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 124**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. பனிமயம் அன்பியம் — ஜூடு ரதி
2. பவுலடியார் அன்பியம் — கேத்தரினா டிவோட்டா
3. பரிபூரணமாதா அன்பியம் — சப்னா கனிஸ்டன்
4. பொம்பெயி மாதா அன்பியம் — மேத்யூ கர்டோசா

### பாராட்டுக்குரியவர்கள் : 119

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. பிருந்தா சார்லஸ்
7. லூர்க்காஸ் சகாயம்
8. சரோஜா
9. ஜெயா

**அன்னை தெரசா**
10. சுரேஷ் பிரேமா
11. ரெயிசா சுஜய்
12. சுகன் மோனிஷா
13. ரொவீனா
14. சாந்தி அந்தோனி
15. செல்வராணி

**அன்னை வேளாங்கன்னி**
16. நான்சி
17. டென்சி
18. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**
19. ரெக்ஸ் கிரீன்வெல்
20. ஜெகன் பெமினா
21. லூரட் வசந்த்
22. ஜூலியட் சாவியோ
23. செலஸ்கி கிளமென்ட்
24. இவாஞ்சலின்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
25. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
26. பிரின்சி
27. சகாயராணி தன்ராஜ்
28. ஸ்டார்லக் ஏஞ்சலின்

**பாத்திமா மாதா**
29. ஜெசிந்தா கான்ஸ்டன்
30. ராஜா ரீனா
31. ஆல்வின் அனு
32. ஜெனிட்டா மைக்கேல்
33. ஆன்ட்ரியா டாரல்
34. ஸ்டெபி ரீகன்
35. பிச்சம்மாள்

**இரக்கத்தின் மாதா**
36. பாப்டிஸ்டா
37. பிரைட்டன் ஜெரோஃபின்
38. இருதயம்மாள் கொன்சால்
39. சித்ரா மோத்தா
40. சேவியரம்மாள் கோமஸ்
41. மேரி ஜியானா

**ஜெபமாலை மாதா**
42. கல்;யாணி செல்வராஜ்
43. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
44. அந்தோனிசாமி
45. ட்ரைபேனா
46. டெரன்சியா அரிஸ்டோ
47. வினோத் சேலிமா
48. அலெக்சாண்ட்ரியா இன்பா

**காவல்தூதர்**
49. வெனிட்டாள்
50. எலிஜா இம்மானுவேல்
51. சார்லட் பிராங்க்
52. ஜெயா அகஸ்டின்
53. ஜெசிமா கிளாரன்ஸ்
54. சாந்தி ஆல்ட்ரின்
55. ஜோ ட்ரினிஷா
56. ரஸ்கின் வசந்தா
57. ரஜூலா அலாய்
58. ராகேஷ்
59. பிரிசில்லா
60. ஜான் ஆல்ட்ரின்

**குழந்தை தெரசா**
61. கிறிஸ்டி லிஸ்டன்
62. பெனி மொறாயிஸ்
63. பெர்லி பென்சன்
64. நிர்மலா
65. கிரிஃபின்

**குழந்தை இயேசு**
66. மோனிகா செபாஸ்டின்
67. அந்தோனியப்பா பிச்சம்மாள்
68. எமல்டா
69. பிரான்சிஸ் வாஸ்
70. ஆரோக்கியராஜ் ஹெலினா
71. பெனாட் கார்லூஸ்

**மணல் மாதா**
72. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
73. அகஸ்டா
74. ரோஸ்லின் தாமஸ்
75. சாண்டினா
76. ஆலிவர் வி. ராயன்
77. சகாயராணி
78. ஃபிலோ கோமஸ்
79. ரஜூலா ஜான்போஸ்கோ
80. ஜெனோ சேவியர்

**மிக்கேல் அதிதூதர்**
81. ஜோசபின் பர்னாந்து
82. வினோ அந்தோனி

**பனிமய அன்பியம்**
83. மெர்சி கோமஸ்

**பவுலடியார்**
84. ராஜா ரோஸ்லின்
85. லீமா ரோஸ்

**பரிபூரண மாதா**
86. ஷெர்லின் ஜெனிஸ்

**பொம்பெயி மாதா**
87. தெரசா பிரகாஷ்
88. அந்தோனியம்மாள் மச்சாது
89. டிஃபானி அண்டோ
90. லூடா கான்ஸ்டன்
91. ஜான்சிராணி அமல்ராஜ்
92. இம்மாக்குலேட்

**இராயப்பர்**
93. இந்திரா ரெஃப்லின்
94. நேவிசம்மாள்
95. டெய்சி

**சவேரியார்**
96. ரூபா மனுவேல்

97. அண்டன் சகாயம்
98. ஜென்சி ஜோர்னஸ்
99. அனுஷ்யா பீட்டர்
100. வினிஸ்டா ஹெரின்
101. ஜான்சி ஜெயகுமார்

**செபஸ்தியார்**
102. அந்தோனியம்மாள் டென்சிங்
103. ஜெசிலா சேவியர்
104. அஸ்கேனியஸ்
105. பிரவீணா
106. பிரின்சி லியோ

**சிந்தாத்திரை மாதா**
107. நேசம்
108. ஜூடி ஆரோக்கியராஜ்
109. செல்வி லாசர்
110. ராஜி ஜஸ்டின்
111. டிஜேபி ராயன்
112. நிஷா

**சிறுமலர் அன்பியம்**
113. விஜி சகாயராஜ்
114. எல்சிட்டா ஆனந்த்
115. செலஸ்டின்
116. சோஃபியா ஜோசப்

**சூசையப்பர்**
117. கிறிஸ் ரிஜோ
118. ரூபி கொர்னேலியுஸ்
119. ஹேமலதா
120. மோனிஷா காஸ்பின்
121. வினிஸ்டா டார்வின்

**திருச்சிலுவை**
122. சரோலின் கில்டன்
123. ஜஸ்டின் ஸ்நோ குளோரி

**வியாகுல மாதா**
124. ராஜா ஜரின்

## II. பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 67

**பரிசு பெறுபவர்கள் : 4**

125. வீ. பட்டணம் — ரேச்சல் ராயன்
126. திண்டுக்கல் — ஜெர்மேன்
127. தூத்துக்குடி குருஸ்புரம் — பிளஸ்ஸி செல்வராஜ்
128. தூத்துக்குடி அந்தோனியார் கோவில் — இருதயம்மாள் கபிரியேல்

### பாராட்டுக்குரியவர்கள் : 66

**ஆலந்தலை**
129. மரியம்மாள்
130. பொன்சேகா

**சிப்பிகுளம்**
131. ஜெனசிஸ்

**புன்னைக்காயல்**
132. சகோ. லோரா மேரி

**ஆறுமுகனேரி**
133. தொம்மை அந்தோனி
134. ஜெயராணி

**ஏரல்**
135. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
136. ஹெலன் அன்னமணி

**சென்னை**
137. கமலஜோதி ஜெயசீலன்
138. ஒஃபிலியா தாமஸ்
139. ஷைனி ரால்ஃப்
140. செல்வ மலர்

**செங்கல்பட்டு**
141. மார்கரட் மேரி

**பாளையங்கோட்டை**
142. பிரேமா குணசீலன்

**சங்கரன்கோவில்**
143. செல்வ மேரி

**பேட்டை**
144. ஹெலனிட்டா

**கயத்தாறு**
145. அமல்ராஜ்

**பெரியகுளம்**
146. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
147. ரோசாலி

**கோயம்புத்தூர்**
148. சத்யா சேவியர்
149. பிரான்சிஸ் ஆர்லன்

**திருச்சி**
150. மோனிட்டா கிறிஸ்டி
151. மேத்யூ விவேக்
152. டோனி
153. ஜான்சி ராணி

**மதுரை**
154. சகோ. ஜான்சி மேரி
155. சகோ. அப்போலின்

**வடக்குத்து**
156. ஹென்றிதாஸ்

**பரமக்குடி**
157. சைமன் சாந்தி

__தூத்துக்குடி நகர பங்குகள்__

**திரு இதயங்களின் பேராலயம்**
158. பீட்டர் ஜெயந்தி
159. ரிமோல்டா
160. ஜெயா பெலிக்ஸ்
161. ரமோலா கமிலஸ்
162. டீனு சேசு பாலு

**குருஸ்புரம்**
163. ஆசீர்வாதம்
164. பௌவுசி ஜோ மைக்கேல்
165. ஜான்சி மெண்டிஸ்
166. டெல்பின்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
167. சுகிர்தா
168. ஷெரினா
169. சகாயம்

**யூதா ததேயு கோவில்**
170. ரோஸ் சேவியர்
171. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
172. ரியாலினோ
173. அன்சிட்டா
174. அனிதா
175. பின்டன் சோஃபியா
176. ஷாந்தினி
177. ரமேஷ் நர்மதா

**சார்லஸ் கோவில்**
178. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
179. செக்கரியா சாமுவேல்
180. ஜோசி குணபாலன்
181. ஜெசிந்தா பர்னாந்து
182. லிஜியா ஃபர்னான்டோ
183. ரெமி ப்ரவீன்

**இஞ்ஞாசியார்புரம்**
184. சூசை நவீன்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
185. விர்ஜின்
186. தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
187. இருதயம்மாள் கபிரியேல்
188. வயோலா ஜான்சன்
189. மென்சிலா லொயோலா

**திரேஸ்புரம்**
190. கோல்வின் ஜேசுராஜ்

**பாத்திமா நகர்**
191. மேரி ஹேம்லின்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 203**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 191**

**உங்கள் கவனத்துக்கு:**
**இம்மாதம் விவிலியப் போட்டி கேள்விகள் தரப்படவில்லை. (கோடை விடுமுறை!?). அடுத்த இதழில் போட்டி தொடரும். கடந்த ஓராண்டாக இந்தப் பணியைத் திறம்பட ஆற்றிய அருள்சகோ. ஆல்ட்ரின் (அலை: 94893 19976) அவர்களுக்கு நம் நன்றிகள்!**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 58)

**மே - 2024**

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

536. மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களின் தலைமையில் இந்த ஆண்டுக்கான **தவப் பவனி** கடந்த 17.03.2024 ஞாயிறு மாலை 05.00 மணிக்குப் பேராலயத்தில் நற்கருணை ஆசீருடன் தொடங்கியது. ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

537. மார்ச் மாதத்துக்கான **பனிமய விவிலியப் பாசறை** (எண்: 104) 20.03.2024 புதன் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் "விவிலிய இறைவேண்டல்கள்" என்ற தலைப்பில் நடைபெற்றது. மொத்தம் 68 பேர் கலந்துகொண்டனர்.

538. புனித வியாழன் (28.03.2024), புனித வெள்ளி (29.03.2024), உயிர்ப்பு நள்ளிரவுத் திருப்பலி (31.03.2024) ஆகிய மூன்று நாள்களும் **புனித வாரத் திருநிகழ்வுகளுக்கு** இயேசு சபைத் துறவி அருள்பணி. ரூபஸ் காட்வின் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள்.

539. புனித வியாழன், புனித வெள்ளி, உயிர்ப்பு நள்ளிரவு திருவழிபாட்டு நிகழ்வுகள் அனைத்தும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன. இந்த ஆண்டு கூடுதல் சிறப்பாக புனித வெள்ளி பெரிய சிலுவைப்பாதையும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

540. பனிமய அன்னைக்கு மக்கள் காணிக்கையாகத் தந்த தங்க நகைகளை உருக்கி 20 பவுனில் ஒரு **தங்க செபமாலை** செய்யப்பட்டு, 31.03.2024 உயிர்ப்புப் பெருவிழா அன்று அன்னைக்கு அணிவிக்கப்பட்டது.

541. 01.04.2024 உயிர்ப்புத் திங்கள் அன்று பங்கின் அனைத்து இல்லங்களும் 14 அருள்பணியாளர்களால் பாஸ்கா புனித நீரால் புனிதப்படுத்தப்பட்டன.

542. ஏப்ரல் மாதத்துக்கான மற்றும் நிறைவு **பனிமய விவிலியப் பாசறை** (எண்: 105) 03.04.2024 புதன் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் "விவிலிய இறைவேண்டல் பரிந்துரைகள்" என்ற தலைப்பில் நடைபெற்றது. மொத்தம் 68 பேர் கலந்துகொண்டனர். நிறைவுப் பாசறை என்பதால், கலந்துகொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

543. பேராலயப் பங்கின் மண்ணின் மைந்தரும், தூத்துக்குடி மறைமாவட்ட அருள்பணியாளருமான அருள்திரு. **யோகராஜ்** 04.04.2024 அன்று தமது 54 ஆவது

வயதில் இறைவனடி சேர்ந்தார்கள். நமது பங்கின் சார்பாக பங்குத் தந்தையின் தலைமையில் 06.04.2024 சனி காலை இரண்டாம் திருப்பலி முடிந்ததும் ஆயர் இல்லச் சிற்றாலயத்திற்குப் பவனியாகச் சென்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

544. பனிமயம் இதழின் **வெள்ளிவிழா நிறைவுக் கொண்டாட்டம்** 07.04.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அருள்முனைவர் லெரின் டிரோஸ் அவர்களின் தலைமையில் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. பனிமயம் வெள்ளிவிழா மலரும், அருள்பணி. குமார்ராஜா, திருவாளர்கள் கலாபன் வாஸ், வெனான்சியுஸ் ஆகியோரின் புதிய நூல்களும் வெளியிடப்பட்டன. கடந்த 25 ஆண்டுகளாக பனிமயம் இதழை அச்சிட்ட பதிப்பாளர், வடிவமைப்பாளர், அலுவலக ஊழியர், முன்னாள் மேலாளர்கள் ஆகியோருக்குப் பனிமய வெள்ளிவிழா விருதுகள் வழங்கப்பட்டன். வெள்ளிவிழா சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

545. நமது பங்கின் புனித பொம்பெயி செபமாலை மாதா பக்த சபையினரின் முன்னெடுப்பில் பேராலய பொம்பெயி மாதா திருவுருவப் படத்தில் **நான்கரை பவுன்** (36 கிராம்) தங்கத்தில் 10 சிறிய நகைகள் செய்யப்பட்டு, கிறிஸ்து பிறப்பின் அறிவிப்புப் பெருவிழாவான **08.04.2024** திங்கள் அன்று பேராலயத்தில் மீண்டும் வைக்கப்பட்டது.

546. நமது பங்கின் புதிய குரு அருள்பணி. **மாரியோ** அவர்களின் முதல் நன்றித் திருப்பலி 15.04.2024 திங்கள் மாலை 05.30 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து, பேராலய மண்டபத்தில் வரவேற்பு வழங்கப்பட்டது.

547. **“வணிக நிறுவனங்களின் வெற்றிக்கான”** பனிமய நோன்பு வழிபாடு (43) 21.04.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் சிறு, குறு வணிக நிறுவனங்களுக்காக மன்றாடக் கேட்டுக்கொண்ட 97 நிறுவனங்களுக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்குப் பனிமயத் தாயின் திருவுருவப் படம் பரிசாக வழங்கப்பட்டது.

548. 05.04.2024 தலைவெள்ளி முதல் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இரவில் திருமணி ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து நடைபெறும்.

549. பங்கின் பக்த சபை உறுப்பினர்களில் 100% வருகை தந்தவர்களுக்கு ஏப்ரல் மாத ஞாயிறு திருப்பலிகளில் ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன.

550. இந்த ஆண்டுக்கான விடுமுறை விவிலியப் பள்ளி 25.04.2024 அன்று தொடங்கி 05.05.2024 வரை 10 நாள்கள் நடைபெற்றது. 100 குழந்தைகள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

# பங்கில் நிகழ்ந்தவை



## வரவேற்கிறோம்

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 151. | ரித்திக் மரியோ | கிளைட்டன் - மெர்லின் திவ்யா | 07.04.2024 | லூர்து மாதா |
| 152. | யாஷ்மிகா | சற்குணா - இன்ஃபென்ட் டீனு | 07.04.2024 | அன்னை வேளாங்கன்னி |
| 153. | இம்மானுவேல் பெர்சியஸ் | ஷியாந் - அபிதா விக்டோரியா | 07.04.2024 | காவல் தூதர் |
| 154. | ஷேன் | லேக்மேன் - ஸ்னோபா | 14.04.2024 | பொம்பெய் மாதா |
| 155. | அந்தோணி ஜியானி | ஜேம்ஸ் - அனன்ஷியா | 28.04.2024 | பனிமயம் |



## வாழ்த்துகின்றோம்

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 185. | மரிய ஆன்ட்ரியா | ஆக்னல் - குயின்சி | 03.04.2024 | பாத்திமா மாதா |
| 186. | தீத்தோனிஸ் டாரல் | ஆக்னல் - குயின்சி | 03.04.2024 | பாத்திமா மாதா |
| 187. | டேசியா | டியோ - அருணா | 06.04.2024 | சூசையப்பர் |
| 188. | லேக்சன் | ஜான்சன் - லதா | 06.04.2024 | பரிபூரண மாதா |
| 189. | ஆண்டனி ஜெஃப்ரின் | ஜேசையா - ஜெஸி ஐசக் | 13.04.2024 | அன்னை வேளாங்கன்னி |
| 190. | கிறிஸ் கிராட்லி | ஜெகதீஷ் - லிசியா | 21.04.2024 | அன்னை வேளாங்கன்னி |



## ஆசி கூறுகின்றோம்

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 132. | சேவியர் - சகாய ஜான்சி | மிக்கேல் அதிதூதர் | 14.04.2024 |
| 133. | ஜஸ்டிஸ் ஸ்டீனர் -சுஷ்மிதா | குழந்தை இயேசு | 14.04.2024 |

### செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 196. | அருள்தாஸ் | நேவிஸ் தீபா | 01.04.2024 | செபமாலை மாதா |
| 197. | சிந்தியா வில்லவராயன் | பிரான்சிஸ் மோத்தா | 16.04.2024 | பொம்பெயி மாதா |
| 198. | சகாயராணி பர்னாந்து | அந்தோணிசாமி | 19.04.2024 | பனிமயம் |

## நடைபெறவிருப்பவை

★ 03.05.2024 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 04.05.2024 மாதத்தின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ நமது பங்கின் மண்ணின் மலர்கள், அடைக்கல அன்னை அவையின் துறவியர் **அருள்சகோ. சுகிர்தா, அருள்சகோ. மர்சலின்** இருவரின் துறவற வெள்ளிவிழா நன்றித் திருப்பலி 11.05.2024 சனி மாலை 05.30 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து வரவேற்பு வழங்கப்படும்.

★ "குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக" **பனிமய நோன்பு வழிபாடு** (44) 12.05.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெறும். அதற்கு ஆயத்தமாக 06.05.2024 திங்கள் முதல் நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நோன்புடன் கூடிய நற்கருணை ஆராதனை நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 171. | 07.05.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | இறைப்புகழ்ச்சி |
| 172. | 14.05.2024 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தூய ஆவியாரை அழைப்போம் |
| 173. | 21.05.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தூய ஆவியாரின் துணையோடு வாழ்வோம் |
| 174. | 28.05.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின்குமார் | மகிழ்ச்சியோடு வாழ்வோம் |

# பனிமயம் இதழின் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்ட நிகழ்வுகள்

பனிமயம் இதழ் 1999ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து தொடங்கப் பட்டது. 2024ஆம் ஆண்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. எனவே அதை முன்னிட்டு பனிமயம் வெள்ளி விழா ஆண்டுக் கொண்டாட்டத்தை நான்கு வகைகளில் கொண்டாடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**நிகழ்வு 1.** பனிமயம் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் **தொடக்க நிகழ்வானது** 2024ஆம் ஆண்டின் முதல் நாளாகிய புத்தாண்டு (01.01.2024) அன்று நடைபெற்றது. அன்று காலை 08.00 மணிக்கு **மேதகு ஆயர் ஸ்டீபன்** அவர்கள் தலைமையேற்று சிறப்பித்த புத்தாண்டு திருப்பலியின் நிறைவில் பனிமயம் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அப்போது பனிமயம் இதழின் இணை நிறுவனரான **அருள் முனைவர் ஜான் சுரேஷ்** அவர்களுக்கு நினைவு விருது வழங்கி மேதகு ஆயர் அவர்கள் கௌரவித்தார்கள். அத்துடன் பனிமயம் இதழின் தொடக்க பொறுப்பாசிரியரும், கடந்த 25 ஆண்டுகளாக பனிமயம் இதழில் எழுதி வரும் மூத்த எழுத்தாளருமான **திருமிகு. கலாபன் வாஸ்** அவர்களுக்கும் மேதகு ஆயர் அவர்களது திருக்கரங்களால் நினைவு விருது வழங்கப்பட்டது. மேலும் மேதகு ஆயர் அவர்கள் இருவருக்கும் சால்வை அணிவித்து கௌரவித்தார்கள்.



**நிகழ்வு 2.** பனிமயம் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் இரண்டாவது நிகழ்வு **எழுத்தாளர்கள் - வாசகர்கள் ஒன்றுகூடல்** என்ற பெயரில் 25.02.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அந்தோணியார் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவுக்கு **பேரருள் முனைவர் ச.தே. செல்வராஜ்** அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து 25 எழுத்தாளர்களுக்கு பனிமயம் வெள்ளிவிழா எழுத்தாளர் விருதை வழங்கி கௌரவித்தார்கள். தொடர்ந்து மூத்த எழுத்தாளர் **திருமிகு. கலாபன் வாஸ்** மற்றும் **திரு. சொர்ணராஜன் விக்டோரியா** இருவருக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப் பட்டனர். பின்னர் எழுத்தாளர்கள் வாசகர்கள் கலந்துரையாடல் நடைபெற்றது. திருவாளர்கள் ரெக்ஸ் வாஸ், அன்றோ ரூபன், பலரும் தங்களுடைய மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். சரியாக 05.30 மணிக்கு தேநீர் விருந்துடன் விழா நிறைவு பெற்றது.

**நிகழ்வு 3.** பனிமயம் வெள்ளிவிழா இதழின் மூன்றாவது கொண்டாட்டம் **பனிமயம் விவிலியப் போட்டி வெற்றியாளர்கள் ஒன்றுகூடலாக** 10.03.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அந்தோணியார் அரங்கில் வைத்து நடைபெற்றது. விழாவிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக விவிலியப் போட்டி வினா-விடைகளைத் தயாரித்த அடைக்கல

அன்னை அவை **அருள்சகோதரி பிரகாசி** அவர்கள் தலைமை தாங்கினார்கள். விவிலியத்தின் சிறப்பு பற்றியும், விவிலியப் போட்டியின் அவசியம் பற்றியும் சிறப்புரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து அருள்சகோதரி பிரகாசி சிறப்புரை வழங்கினார்கள்.

இந்த ஆண்டு முழுவதும் 200 போட்டியாளர்களின் பதில்களை சரிபார்த்து, வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்த களப் பணியாளர் **அருள்சகோதரர் ஆல்ட்ரின்** அவர்களுக்கு நினைவு விருது வழங்கப் பட்டது. தொடர்ந்து, விவிலியப் போட்டி குறித்த சில கருத்துக்களை சகோதரர் வெற்றியாளர்களுடன் பகிர்ந்துகொண்டார். பேராலயப் பங்கு மற்றும் நகரப் பங்குகளிலிருந்து 68 விவிலியப் போட்டி வெற்றியாளர்கள் கலந்து கொண்டனர். வெற்றியாளர்களில் சிலர் தங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். பின்னர் அவர்களுக்கு சான்றிதழும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டது.

**நிகழ்வு 4.** பனிமயம் வெள்ளிவிழா இதழின் நான்காவதும், இறுதியுமான விழா "பனிமயம் வெள்ளிவிழா நிறைவுக் கொண்டாட்டம்" என்ற பெயரில் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணிக்கு அந்தோணியார் அரங்கில் வைத்து நடைபெற்றது. விழாவிற்கு முன்னாள் அதிபர், பங்குத் தந்தை, பனிமய இதழாசிரியர், பதிப்பாளரான அருள்முனைவர் லெரின் டிரோஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பங்குத் தந்தை அருள்பணி. குமார்ராஜா வரவேற்புரை வழங்கி மேடையில் வீற்றிருந்த அருள்முனைவர் லெரின் டிரோஸ், மூத்த எழுத்தாளரும் முன்னாள் பொறுப்பாசிரியருமான திருவாளர் கலாபன்



வாஸ் மற்றும் கடந்த 20 ஆண்டுகளாகப் பனிமயம் இதழை வடிவமைத்து, அச்சிட்டு வரும் திருவாளர் சதீஷ்குமார்-சாந்தகுமாரி தம்பதியர் ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து அருள்முனைவர் லெரின் டிரோஸ் சிறப்புரை வழங்கினார்கள். தொடர்ந்து பனிமயம் வெள்ளிவிழா மலர், அருள்பணி. குமார்ராஜா அவர்களின் "மரியன்னையின் முன்னோடிகள்", திருமிகு. கலாபன் வாஸ் அவர்களின் "வானத்து வதனமொழி" மற்றும் திருமிகு. வெனான்சியுஸ் அவர்களின் "வீணையில் விளைந்த சலனங்கள்" ஆகிய படைப்புகளை அவர்கள் வெளியிட்டார்கள்.

தொடர்ந்து, அருள்முனைவர் லெரின் டிரோஸ் 8 பேருக்கு வெள்ளிவிழா விருதுகளை வழங்கினார்கள். கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் வென்ற 9 படைப்பாளர்களுக்கு விருது மற்றும் பரிசுகளை வழங்கினார்கள். தொடர்ந்து, விவிலியப் பாசறைகளில் அதிக பங்கேற்பு செய்த 21 பேருக்கும் சான்றிதழும், பரிசு, தங்கத் தேர் மலர் ஆகியன வழங்கினார்கள்.

வெற்றியாளர்களில் சிலர் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. இவ்வாறு, பனிமயம் இதழின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் நிறைவுக்கு வந்தன.

# குருத்துவ அருட்பொழிவு வெள்ளிவிழா

## 1999 - 2024



# அருட்தந்தை T. டெரன்ஸ் மஸ்கரனாஸ் S.V.D.

(RESURRECTION PARISH, KWUN TONG, KOWLOON, HONGKONG)

குருத்துவ வெள்ளிவிழா காணும்
**அருட்தந்தை T. டெரன்ஸ் மஸ்கரனாஸ்**
அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம்.
ஆன்மீக நலம் பெற்று மென்மேலும் இறைப்பணி சிறக்க
இறைவனை வேண்டுகிறோம்.

## வெள்ளிவிழா திருப்பலி

**31.05.2024, வெள்ளிக்கிழமை காலை 10 மணி**
**பரிசுத்த பனிமய அன்னை பேராலயம்,**
தூத்துக்குடி

இவண்
**சகோதர சகோதரிகள்**
மற்றும் **மஸ்கரனாஸ் குடும்பத்தினர்கள்**

1, பெரிய கோவில் தெரு, தூத்துக்குடி.
9566328215

# In Loving Memory of

## H. DENZIL ROCHE



Born
02.08.1936
Died
25.11.1993

## H. BERTRAM ROCHE



Born
08.01.1943
Died
16.06.1996



Born
16.06.1907
Died
25.11.1967

## HAVELOCK ROCHE



Born
23.03.1913
Died
26.12.1980

## MARGARET ROCHE

To live in the hearts of those we leave
behind is never to die Too well loved to ever be
forgotten The song has ended but the melody
lingers on. At the going down of the Sun.
and in the morning we will remember you
The quote by Golden in Death, "In the end,
it's not about how we die, but how we lived'.

**GRAND CHILDREN, GREAT GRAND CHILDREN**

*No. 2, Appa Garden Street, Kilpauk. Chennai - 600 010.*
*Mob : 98410 54083*

"அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்;
என்றும் செழுமையும் பசுமையுமாய் இருப்பர்"
(திபா 92:14)

# திருமணப் பொன்விழா வாழ்த்துகள்!

22.05.2024



**1974 - 2024**

## திரு. ஜெயசீலன் ஃபர்னான்டோ
## திருமதி. கமலஜோதி

எம் பெற்றோரைக் கடந்த 50 ஆண்டுகளாக
அன்புடன் பாதுகாத்து, வழிநடத்திய
அன்பின் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.
தொடர்ந்து, அவர்களை ஆசீர்வதிக்க இறைஞ்சுகிறோம்.

*மகன் - மருமகள்*
யோகானந் – அனிதா

*மகள் - மருமகன்*
ரெக்ஸ்லின் – யூஜின்

*பேரன்மார், பேத்தி*
ஜோஷுவா, ஐவன்    க்ளென், ஜியானா

*அன்புடன் வாழ்த்தும்*
அருள்பணி. குமார்ராஜா    அருள்சகோ. ரொசாரியோ FMM
மற்றும் உடன்பிறப்புகள், உறவினர்கள்

SHINY Ph : 98421 31493